# சாதாரணக்கூட்டம்

கோயம்புத்தூர் மாவட்டம், கூடலூர் நகராட்சி சாதாரணக் கூட்டம் 20.03.2023 ஆம் நாள் திங்கட்கிழமை பிற்பகல் 04.30 மணிக்கு கூடலூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து பரிசீலித்து முடிவு செய்யப்படும். துணைத் தலைவர் மற்றும் அனைத்து நகர மன்ற உறுப்பினர்களும் மேற்கண்ட சாதாரணக் கூட்டத்தில் கலந்துகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**முன்னிலை :–**

1. திரு.அ.அறிவரசு அவர்கள், தலைவர், கூடலூர் நகராட்சி
2. திரு.கி.பால்ராஜ் அவர்கள், ஆணையாளர்(கூ.பொ), கூடலூர் நகராட்சி

**பொருள் எண்:01**

அரசாணை எண்.71, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.13.09.2021ன்படியும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.18698/2021/பி2 நாள். 22.04.2022ன் படி **நமக்கு நாமே திட்டம் 2022–23ன் கீழ்** பணிகள் மேற்கொள்ள இலக்கீடு நிர்ணயம் செய்து கருத்துரு சமர்ப்பிக்கத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கூடலூர் நகராட்சியில் **நமக்கு நாமே திட்டம் 2022–23**ன் கீழ் கீழ்க்காணும் பணிகள் தேர்வு செய்யப்பட்டு, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடித ந.க.எண்.4299/2022/பி1 நாள். 20.02.2023ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Construction of drain at Ward No.02 CSI Nagar Cross Roads – Nandhini colony Cross Roads (166002S043) (166002S044) (166002S045) in Gudalur Municipality. | 26.00 |
| 2 | Construction of drain at Ward No.03 Padmabalaji Avenue Cross Roads(166002S027) in Gudalur Municipality. | 9.55 |
| | **மொத்தம்** | **35.55** |

**பொருள் எண்:02**

கூடலூர் நகராட்சியில் **நமக்கு நாமே திட்டம் 2022–23**ன் கீழ் பணிகள் மேற்கொள்ள 08.03.2023 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் கீழ்க்காணும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | Construction of drain at Ward No.02 CSI Nagar Cross Roads – Nandhini colony Cross Roads (166002S043) | **26.00** | திருமதி.பிரேமாவதி, ஒப்பந்ததாரர் | 0.04% மதிப்பீட்டை விட குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | (166002S044) (166002S045) in Gudalur Municipality. | | தி/வா.எஸ்.விஜயகுமார், ஒப்பந்ததாரர் | 1.58 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | Construction of drain at Ward No.03 Padmabalaji Avenue Cross Roads(166002S027) in Gudalur Municipality. | 9.55 | திருமதி.பிரேமாவதி, ஒப்பந்ததாரர் | 0.05% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | தி/வா.எஸ்.விஜயகுமார், ஒப்பந்ததாரர் | 1.58 % மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கியதில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **திருமதிபிரேமாவதி**, **ஒப்பந்ததாரருக்கு** பணி ஆணை வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண்:03**

கூடலூர் நகராட்சியில் **சட்டமன்ற அறிவிப்புகள் 2022–23**ன் கீழ் ரூ.3.80 கோடி மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டிடம் கட்ட நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.7628/2022/எம்.எ1 நாள்.04.01.2023ல் அனுமதி பெறப்பட்டதைத் தொடர்ந்து, 08.03.2023 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் கீழ்க்காணும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (கோடியில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | கூடலூர் நகராட்சியில் அலுவலக கட்டிடம் கட்டுதல். | 3.80 | திரு.எஸ்.ராஜு, ஒப்பந்ததாரர் | 0.03% மதிப்பீட்டை விட குறைவு |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கியதில் தகுதிவாய்ந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **திரு.எஸ்.ராஜு, ஒப்பந்ததாரருக்கு** பணி ஆணை வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண்:04**

கூடலூர் நகர்மன்றத் தீர்மான எண்.192 நாள்.13.02.2023ல் கூடலூர் நகராட்சியில் அம்ருத் 2.0ன் கீழ் கீழ்க்காணும் பணி மேற்கொள்ள அங்கீகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, 08.03.2023 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் கீழ்க்காணும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 16 க.ச.எண்.610 பாலாஜி நகர் பகுதியில் பூங்கா அமைத்தல். | 41.00 | திரு.எஸ்.விஜயகுமார், ஒப்பந்ததாரர் | 0.11% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | தி/வா.ஸ்ரீ கோமதி அம்மன் அன் கம்பெனி, ஒப்பந்ததாரர் | 0.57% மதிப்பீட்டை விட குறைவு |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கியதில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **திரு.எஸ்.விஜயகுமார், ஒப்பந்ததாரருக்கு** பணி ஆணை வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண்:05**

கூடலூர் நகராட்சியில் வார்டு எண்.1 முதல் 27 முடிய மொத்தம் 149.77 கி.மீ நீளத்தில் 113.50 கி.மீ தார்சாலைகளும், 13.80 கி.மீ நீளத்தில் சிமெண்ட் காங்கிரீட் சாலைகளும், 0.396 கி.மீ நீளத்தில் பேவர் பிளாக் சாலைகளும், 22.07கி.மீ நீளத்தில் மண்சாலைகளும் உள்ளன. அதில் 2016–2017க்கு முன்னர் போடப்பட்ட தார்சாலைகளை புதுப்பித்தல் பணி மேற்கொள்ள, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.27062/2022/SS3 நாள்.13.02.2023ன் படி **நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2022–2023**ன் கீழ் கூடலூர் நகராட்சியில் கீழ்க்கண்ட இடங்களில் ஏற்கனவே உள்ள சாலைகளை புதுப்பித்தல் பணி ரூ.205.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | நீளம் (கி.மீ) | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | Improvement of BT Surface at Balaji Nagar, RV Nagar, Anandha Nagar, Samaiyan Nagar, TRD Nagar, Manikavasaga Nagar, Gandhi Nagar, Raju Narayanan Garden and Venkatachalapathi Nagar in Gudalur Municipality. | 6.00 | 205.00 |
| | **Total** | **6.00** | **205.00** |

**பொருள் எண்:06**

அரசாணை (நிலை) எண்.36, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.10.03.2023ல் கூடலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஏற்கனவே உள்ள

குழல்விளக்குகளை LED தெருவிளக்குகளாக மாற்றியமைத்தல் (Conversion of Conventional Street lights into energy efficient lights) பணிக்கு ரூ.134.56 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, கீழ்க்காணும் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஏற்கனவே உள்ள குழல்விளக்குகளை LED தெருவிளக்குகளாக மாற்றியமைத்தல். | 134.56 |

**பொருள் எண்:07**

கோயம்புத்தூர் மாவட்ட கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி), மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.928/2020/ஆ2 நாள்.20.02.2023ல் கோயம்புத்தூர் மாவட்டம், கூடலூர் நகராட்சியில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள திரு.A.ராசா, பாராளுமன்ற உறுப்பினர்(மக்களவை), நீலகிரி தொகுதி அவர்களால் பரிந்துரைக்கப்பட்டு, பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம் –2022–23ன் கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள, மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

**பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம் –2022–23**

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒதுக்கீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | Construction of Bus Shelter at Thekkupalayam Pirivu in Ward No.27 Kovai Mettupalayam Road (West Side) of Gudalur Municipality. | 7.50 | 7.50 |
| 2 | Construction of Bus Shelter at Veerapandi Pirivu in Ward No.4 in front of Lakshmi Theater of Gudalur Municipality. | 7.50 | 7.50 |
| | **மொத்தம்** | **14.** | **7.50** |

**பொருள் எண்:08**

கூடலூர் நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிலுள்ள உள்ள 14 கணினிகளுக்கு வருடாந்திர பராமரிப்பு பணிகள் (AMC) மற்றும் பழுதுபார்த்தல் பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.2.00 இலட்சம் நகராட்சியின் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண்:09**

கூடலூர் நகராட்சியில் உள்ள பொதுப்பிரிவு, வருவாய் பிரிவு, பொறியியல் பிரிவு மற்றும் பொதுசுகாதாரப்பிரிவு ஆகியவற்றின் பணிகள் மேற்கொள்ள அலுவலகத்தில் மொத்தம் 14 கணினிகள் 3 Dot Matrix Printers, 4 பிரிண்டர்கள் ஆகியன இயக்குவதற்கும், மற்றும் அத்தியாவசிய மின்சாதன பொருட்கள் ஆகியன தங்கு தடையின்றி இயக்குவதற்கும் நகராட்சி அலுவலகத்தில் போதுமான மின்சாரம் வழங்கவேண்டியிருப்பதால், 5KVA ஆன்லைன் யு.பி.எஸ் பேட்டரி –10 எண்ணிக்கை மற்றும் சார்பு உபகரணங்கள் கொள்முதல் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.8.00 இலட்சம் நகராட்சியின் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் எண்:10**

கூடலூர் பேரூராட்சியானது இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதால், அரசாணை(நிலை) எண்.10 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(நப.1) துறை, நாள்.23.01.2023ன் படி பொதுப்பிரிவு, பொறியியல் பிரிவு, வருவாய் பிரிவு, நகரமைப்பு பிரிவு மற்றும் பொதுசுகாதாரப் பிரிவு என பல்வேறு பிரிவுகளில் பணியிடங்கள் தோற்றுவிக்கப்படவுள்ளதால், கூடுதல் பணியாளர்கள் பணியமர்த்தப்படுவதாலும், தற்போதுள்ள அலுவலகக் கட்டிடத்தில் போதிய இட வசதி இல்லாததால், நகராட்சியின் கூட்ட அரங்கு அறையை பிரிவு அறைகளாக வகைப்படுத்த(Partition) ஆகும் தோராய செலவினம் ரூ.10.00 இலட்சம் நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் எண்:11**

கூடலூர் நகராட்சியில் அலுவலகப் பயன்பாட்டிற்குத் தேவையான பிறப்பு இறப்பு விண்ணப்பங்கள், தபால் கவர்கள், சொத்துவரி, காலியிடவரி மற்றும் குடிநீர் இணைப்பு படிவங்கள், ஈமச்சடங்கு படிவங்கள், பல்வேறு பதிவேடுகள் மற்றும் எழுதுபொருட்கள் ஆகியன கொள்முதல் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.10.00 இலட்சம் நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் எண்:12**

கூடலூர் நகராட்சியில் வழக்குகள் எடுத்த நடத்த **திரு.கு.மயில்வாகனம்,MA.,BL.,** வழக்கறிஞர் என்பவரின் விண்ணப்பத்தின் அடிப்படையில் கூடலூர் நகராட்சியின் வழக்கறிஞராக நியமனம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் எண்:13**

கூடலூர் நகராட்சியின் 2022–2023 ம் ஆண்டுக்கான திருத்திய திட்ட மதிப்பீடு மற்றும் 2023–2024 ம் ஆண்டுக்கான திட்ட மதிப்பீடு நகர்மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பொருள் எண்:14**

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 27 வரை இடிக்கப்பட்ட கட்டிடங்கள், இரட்டைப்பதிவு, பேரூராட்சி மென்பொருளில் உள்ளவாறு கேட்பு எழுப்பப்படாத குடிநீர் இணைப்புகள் ஆகியன கேட்பு பட்டியலில் இருந்து நீக்கம் செய்ய, பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே கீழ்காணும் பட்டியலில் கண்டுள்ள சொத்துவரி மற்றும் குடிநீர் இணைப்பு எண்களை கேட்பு பட்டியலில் இருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**நகர்மன்ற தலைவர்**
**கூடலூர் நகராட்சி**
**கோயம்புத்தூர்–47**

**<u>20.03.2023 அன்று நடைபெற்ற நகரமன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மானங்கள்</u>**

| **பொருள் எண்** | **தீர்மான எண்** | **தீர்மானம்** |
|---|---|---|
| 1 முதல் 6 முடிய | 200, 201, 202, 203, 204, 205 | அங்கீகரிக்கப்படுகிறது. |
| 7 முதல் 11 முடிய | 206, 207, 208, 209, 210 | அங்கீகரிக்கப்பட்டது. |
| 12 முதல் 14 முடிய | 211, 212, 213 | அங்கீகரிக்கப்படுகிறது. |

ஒ.ம்/ திரு.அ.அறிவரசு,
தலைவர்
கூடலூர் நகர்மன்றம்
கோயம்புத்தூர்.

**//உண்மை நகல் //**

21/11/2023

ஆணையாளர்(கூ.பொ)
கூடலூர் நகராட்சி
கோயம்புத்தூர்–47

21.11.2023